www.tamilarangam.net

அன்பளிப்பு - 25 p


# தமிழீழ விடுதலைப்புலிகள்

வெளியீடு: 8

அக்டோபர் 86


யாழ்ப்பாணம்

# கோட்டையில் சிங்கள இராணுவம் பீதியுடன் இருக்கிறது!

## ராய்ட்டர் நிருபரிடம் இராணுவ அதிகாரிகள் ஒப்பாரி !!

யாழ்ப்பாண நிலைமையை நேரில் காணச்சென்ற ராய்ட்டர் நிருபரிடம் சிங்கள இராணுவ உயரதிகாரிகள் விடுதலைப் போராளிகள் ஓய்வு கொடுக்காது இடைவிடாது நடாத்திவரும் முற்றுகையினாலும், மோட்டார் தாக்குதலினாலும் சிங்கள இராணுவத்தினர் பீதியடைந்துள்ளனர் என்றும், அவர்களுக்கு ஓய்வு கொடுக்காது போராளிகள் நடாத்திவரும் தாக்குதலினால் அவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டிருக்கின்றது என்றும் முறையிட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தின் இன்றைய உண்மை நிலைபற்றி நேரில் கண்டுவந்த ராய்ட்டர் நிருபர் தெரிவித்திருப்பதாவது :-

''தனித் தமிழ் நாடு கோரும் விடுதலைப் புலிகளின் பலம் வாய்ந்த இடமாக அமைந்திருக்கும் யாழ் குடா நாட்டில், அரசின் பிரதான தளம் யாழ் கோட்டைக்குள் இருக்கிறது. கடந்த வருடம் இராணுவ அணி ஒன்று கோட்டைக்குள் வந்து சென்றதை அடுத்து, கோட்டை கிளர்ச்சிவாதிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு இலக்காகி வந்துள்ளது. 25 அடி உயரம் உள்ள உயர்ந்த மதில்களைக் கொண்ட இக் கோட்டை நட்சத்திர வடிவில் ஒல்லாந்தர்களினுல் அமைக்கப்பட்டது. 20,000 மக்கள் வாழும் யாழ் நகரின் ஒரு விளிம்பில் இக்கோட்டை இருக்கிறது. யாழ்ப்பாணம் கிளர்ச்சிவாதிகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது.

''யாழ்ப்பாணத்திலிருக்கும் பத்து இராணுவ முகாம்கள், தலைமையகத்துடன் குண்டு மாரி பொழியும் கெலிகாப்டர் மூலமாகவே தொடர்புகளை மேற்கொள்ளுகின்றன.''

''கோட்டைக்கு அப்பா கிளர்ச்சிக்காரர்களின் மணல் மூடை அரண்கள் இ[illegible]க்கின்[illegible]ன. கோட்டையின் தென் பகுதி மட்டுமே கெரில்லா வேட்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகாமல் இருக்கிறது.

புலிகள் தாமே சொந்த மோட்டார் குண்டுகளைத் தயாரித்துக் கொள்கிறார்கள். சில வேளைகளில் தாமதித்து வெடிக்கக் கூடிய குண்டுகளைத் தயாரிக்கிறார்கள். குண்டு வெடிக்கும் நேரம் திரியின் நீளத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. உந்து சக்தியால் திரி எரிக்கப்படுகிறது.''

''குண்டுகள் அலுமினியக் கலன்களில் அடைக்கப்படுகின்றன. இதன் விளைவாக புலிகளின் குண்டுகள் வெடிக்கும்போது பெரும் பெரும் துண்டுகளாகச் சிதறுகின்றன. எமது படையினருக்கு ஏற்படும் காயங்கள் பெரியவையாக இருக்கின்றன என்று யாழ் மாவட்டப் பாதுகாப்புப் படையினரின் உயர்ந்த சுறுசுறுப்பான கமாண்டரான பிரிகேடியர் ஜெரால்ட் டீ சில்வா தெரிவித்தார்.''

கடைசியாக நடத்தப்பட்ட தாக்குதலின் முதல் நாள் இரவின் போது, இருதுருப்பினர் கொல்லப்பட்டனர். மறுநாள் இரவு இருவர் காயமுற்றனர். கெரில்லாக்களின் மோட்டார் குண்டுகளை எதிர்த்து இராணுவம் தனது சொந்த மோட்டார் குண்டுகளைப் பாவிக்கிறது. இரண்டாம் நாள் நடைபெற்ற மோதலின்போது இலங்கையின் மிகவும் தேடப்பட்டுவரும் கிளர்ச்சிக்காரரான ச்தாசிவம் கிருஷ்ண குமார் காயமுற்றார் என்றும், மேலும் 4 கெரில்லாக்கள் கொல்லப்பட்டனரென்றும் அந்த இராணுவ அதிகாரி சொன்னார்.

**''தனி நாடு கோரி யுத்தம் நடத்திவரும் குழுக்களில் மிகவும் சக்திவாய்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் தளபதிதான் கிட்டு என அழைக்கப்படும் கிருஷ்ண குமார் என்பது குறிப்பிடத்தக்கது.**

(கிட்டு காயமுற்றார் என்ற செய்தி சிங்கள ஆயுதப் படையினரால் பரப்பிவிடப்பட்ட வெறும் வதந்தியே தவிர அதில் சிறிதும் உண்மையில்லை.)

''இந்த முற்றுகை இராணுவத்தினருக்குத் துயரத்தை ஏற்படுத்துகிறது. அகழிக்குளுள்ள துயிலும் விடுதிகளில் இந்த இராணுவ வீரர்கள் காதலிகளைப் பற்றிக் கதை அளக்கிறார்கள். சிரிப்பொலியைக் கேட்க முடியவில்லை; சுவர்களில் பெண்களின் படங்கள் இல்லை. ''யாழ் கோட்டையில் மனோதத்துவ

**பிரித்தானியக் கிளையினரின் வெளியீடு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வைத்தியர் ஒருவர் தேவையெனத்தான் நினைக்கிறேன். ஆனால் எமது சகல முகாம்களிலும் டாக்டர்கள் பற்றாக்குறையாக உள்ளது'' என்று பிரிகேடியர் ஜெரால்ட் டி சில்வா என்னிடம் கூறினார். யாழ் கோட்டையிலிருந்து 10 மைல் அப்பால் உள்ள சிறிய விமான நிலையமான பலாலியில் அவருடைய அலுவலகம் இருக்கிறது. பொதுவாகத் துருப்பினர் ஒரு வருடத்துக்கென்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். இப்போது அது 6 மாதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஒரு வருடம் நீண்டதாகும். நடவடிக்கைகளும், கொந்தளிப்புகளும் இங்கு உள்ளன. அதாவது மூன்று அல்லது நான்கு மாதத்துக்கு ஒருவர் அனுப்பப்பட வேண்டுமென்று ஜெரால்ட் டி சில்வா தமது அலுவலகத்தில் வைத்துக் கூறினார்.''

"மூன்று வாரங்களின் பின்னர் ஒரு படை வீரர் ஒருவார லீவு பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் அவரது யுத்த மட்டத்தைப் பொறுத்தே இந்த லீவு வழங்கப்படும். லீவில் போவதனால் பிரச்சினை தீர்ந்துவிடாது. ஏனெனில் தனது வீட்டில் அன்புக்குரியவர்கள் மனதில் கொந்தளிப்பு இருப்பதை அறிந்து கொள்கிறார். எனது பிள்ளைகளிலும், மனைவியிலும் நான் இதே கொந்தளிப்பைக் காணுகிறேன் என்றும் ஜெரால்ட் டி சில்வா சொன்னார்.''

''புலிகள் இரவு பகலாக நடத்திவரும் குண்டுத் தாக்குதல் எமக்குப் பீதியை ஏற்படுத்துகிறது. அவர்கள் எம்மை ஓய்வெடுக்க விரும்பவதில்லை என்று மேஜர் ஆரியரத்னா சொன்னார்''.

''இரவில் நடக்கும் குண்டுத் தாக்குதல்களினால் கொந்தளிக்கும் இராணுவத்தினர் அச்சத்தினால் கடமை நேரத்தைக் குறைத்துக்கொள்கின்றனர். சில நேரங்களின் முகாமுக்கு வெளியே புலிகளின் போர் ஆயுத்தங்களையும் நேரே பார்க்கிறோம் என்று காப்டன் லக்சிறி அமாதுங்கா சொன்னார்.''

# சனநாயகமும் சோசலிசமும்

சனநாயகம் என்றால் என்ன? சோசலிசம் என்றால் என்ன? இந்த இரண்டு அரசியல் கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று முரணானவையா? இக்கோட்பாடுகள் இரு மாறுபட்ட, முரண்பாடான அரசியல் அமைப்புகளை குறித்து நிற்கின்றனவா? இந்தக் கேள்விகளுக்கு தெளிவான பதில்கள் காண்பதுடன் எமது அரசியல் நிலைப்பாட்டையும் இங்கு எடுத்துவிளக்க விரும்புகிறோம்.

சனநாயகமும் சோசலிசமும் இரு முரண்பட்ட அரசியல் இலட்சியங்களை குறித்து நிற்பதாக பலர் கருதக்கூடும். இது தவறான கண்ணோட்டமாகும். மூல அர்த்தத்தில் இக்கோட்பாடுகள் முரண்பட்டவை அல்ல. மாறாக, இவை சமூக நீதியையும் தர்மத்தையும் தழுவிக்கொள்ளும் ஒரு அரசியல் சமுதாயத்தை குறிக்கின்றன. இந்த சமுதாயத்தில் தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயிக்கும் உரிமையும் அதிகாரமும் மக்களுக்கு உண்டு என்பதை இக் கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன. அப்படியிருக்கும்பொழுது இந்தத் தவறான கண்ணோட்டம் எவ்விதம் தோற்றம் கொண்டது? இந்த அரசியல் கோட்பாடுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக கொள்ளப்படுவது ஏன்?

மேற்கத்தைய முதலாளிய உலகில் 'சனநாயகம்' என்ற போர்வையில் ஒரு அரசியல் அமைப்பு நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதே வேளை கம்யூனிச உலகில் சோசலிசம் என்ற கருத்துருவில் ஒரு அரசியல் முறை செயற்படுகிறது. இவ்விதம் இந்த இரு உலகிலும் செயற்படுத்தப்பட்டுவரும் அரசியல் வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்விரு கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று முரணானவை என்ற தவறான கண்ணோட்டம் எழுந்திருக்கலாம். இதுபற்றி சிறிது விரிவாகப் பார்ப்போம்.

கிரேக்க மொழியின் மூல அர்த்தத்தில் சனநாயகம் என்ற சொல் மக்கள் களத்திலிருந்து பிரவாகமெடுக்கும் அரச அதிகாரத்தை, மக்கள் ஆட்சியைக் குறிக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான நீண்ட அரசியல் வரலாற்றுப் பயணத்தில் இந்தக் கோட்பாடானது பல அர்த்த பரிமாணங்களைக் கொண்டதாக செழுமைபெற்றுள்ளது. இக் கோட்பாட்டின் அடிப்படையில் மேற்கத்தைய முதலாளிய சமுதாயங்களில் ஒரு திட்டவட்டமான அரசியல் ஆட்சி வடிவமும் உருவகம் கொண்டுள்ளது. இன்று சனநாயகம் என்ற சொல் பல்வேறு மனித சுதந்திரங்களையும், உரிமைகளையும் குறிப்பிடுகிறது. சமுதாயத்தை நிர்மாணம் செய்யும் பெரும் பணியில் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமையும் பங்கும் உண்டு என்பதை வலியுறுத்துகிறது. சிந்தனைச் சுதந்திரம், கருத்து வெளிபாட்டுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம்—இப்படியான பல்வேறு சுதந்திரங்கள் மக்களின் சனநாயக சுதந்திரங்களாகச் சொல்லப்படுகின்றன. தேர்தல் முறையும், தெரிவுசெய்யும் முறையும், அரசியல் பன்மை முறையும் சனநாயகப் பண்புகளாக பேணப்படுகிறது. சுதந்திரம், சமத்துவம், தர்மம் ஆகிய உன்னத இலட்சியங்களை சனநாயகம் மேன்மைபடுத்துவதோடு மக்களின் இறைமையில், மக்களின் தீர்ப்பில், மக்களால் மக்களுக்காக கட்டியெழுப்பப்படும் ஒரு அரச ஆட்சி முறையை வலியுறுத்துகிறது.

கொள்கை அடிப்படையில், கோட்பாடு ரீதியில், கருத்துருவ அர்த்தத்தில் சனநாயகமானது ஒரு மகத்துவமான அரசியல் ஆட்சிவடிவத்தை இலட்சியமாகக் கொண்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் நடைமுறை யதார்த்தமோ வேறு. மேற்கத்தைய முதலாளித்துவ சமுதாயங்களிலும் மற்றும் சில நாடுகளிலும் நிலவும் ஆட்சி அமைப்பு முறையில் சனநாயக தத்துவம் பேணப்படவில்லை என்றே சொல்லவேண்டும். இந்நாடுகளின் அரசியல் யாப்புகளில் மட்டும் சனநாயக இலட்சியங்கள், உரிமைகள், சுதந்திரங்கள் எல்லாம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சனநாயகத்தின் பெயரால் நடைபெறும் ஆட்சியோ வேறு. மனிதாபிமானமற்ற சுரண்டல் முறையும், சமூக அநீதிகள் நிறைந்த, பொருளாதார ஏற்றத்தாழ்வுடைய ஒடுக்குதல் முறையுமே இந்த ஆட்சி அமைப்பில் காணக்கூடியதாக இருக்கிறது. அரசியல் சுதந்திரம் என்றும், தனி மனித உரிமை என்றும், பல கட்சிப் போட்டி என்றும் நடைபெறும் இந்த சனநாயக சதுரங்க விளையாட்டில் ஆட்சி பீடம் ஏறுவதும் அதிகாரம் செலுத்துவதும் முதலாளி வர்க்கமே. காலத்திற்கு காலம் மக்கள் தேர்தல் என்று ஒட்டுப பதிவெடுக்கும் செப்படி வித்தைகாட்டி பணம்படைத்த வர்க்கமே ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிக்கொள்கிறது.

முதலாளித்துவ ஆளும் வர்க்கமானது சனநாயக தத்துவத்தை, சனநாயகத்தின் உன்னத இலட்சியத்தினை ஒரு சித்தாந்தக் கருவியாகவே கையாளுகிறது. மக்கள் ஆட்சி என்று கூறி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்